**<u>IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,</u>**

**<u>TENKASI.</u>**

**Date : 16.03.2026**

**OS No. : 241/2019**

**Dw : 1**

**Name : திரு. ராமசாமி**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்துவருகிறேன் என்றால் சரிதான். நான் வீ.கே.புதூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்துவருகிறேன். வாதி பிராதில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தை மோசடி என்றும், ஏமாற்றி கிரையம் பெற்றுள்ளார் என்றும் கூறியுள்ளார். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்களை வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். நான் தலைமை காவலர் பணியை தவிர வருமானத்திற்காக வேறு தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. தபசில் சொத்துக்களை தவிர எனக்கும் எனது மனைவிக்கும் வேறு சொத்துக்கள் உண்டா என்றால் எங்களுக்கு மருதம்புத்தூர் கிராமத்தில் பூர்வீகசொத்து உள்ளது. அது வயலாகும், வீடு கிடையாது. நான் தற்போது ஆலங்குளத்தில் சொந்தமாக வீடுகட்டி குடியிருந்துவருகிறேன் என்றால் சரிதான். அது 4 செண்ட் நிலத்தில் கட்டப்பட்ட 2 மாடி வீடு என்றால் சரிதான்.

2) 2017 ம் காலக்கட்டத்தில் எனது வருமானம் என்னவென்றால் அது நினைவில்லை. தற்போது எனது மாத வருமானம் என்னவென்றால் அது இவ்வழக்கிற்கு அவசியமற்றதாகும். நான் தற்போது மாதம் ரூ.80,000/– சம்பளம்

பெற்றுவருகிறேன் என்றால் அதை பார்த்துதான் சொல்லமுடியும். என் மனைவி சில்வியா அன்சி எந்த வேலையும் செய்யவில்லை, வீட்டுக்குடித்தனம்தான். வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் எனது மனைவி வட்டித்தொழில் செய்துவருவதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை எனது எதிர் வழக்குரையில் நான் மறுத்து கூறவில்லை என்றால் சரிதான். நான் காவல் துறையில் பணிபுரிவதால் வட்டித்தொழில் செய்யக்கூடாது என்பதற்காக எனது மனைவியின் பெயரில் வட்டித்தொழில் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் எத்தனை தபசில் விவரங்களை காட்டியுள்ளார் என்றால் அது எனக்கு நியாபகமில்லை. பிராது 1ம் தபசில் சொத்து, வாதி சுப்பையாவுக்கு வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் அடிப்படையில் வாதியை தவிர வேறு யாருக்கும் பிராது 1ம் தபசில் சொத்து பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரிதான். பிராது 1ம் தபசில் சொத்தில் வாதி 32, 32 ஏ என இரண்டு வீடுகளை கட்டியிருந்தார் என்றால் சரிதான். வாதியின் பெயரில்தான் மேற்படி இடத்தின் பட்டா இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வீடுகளின் விஸ்தீரணம் என்ன என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு விடுகளிலும் எத்தனை மின் இணைப்புகள் உள்ளன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) வாதி வழக்கை தாக்கல் செய்தபோது என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். அவற்றை நான் பார்த்துள்ளேன். பிராது 1, 2 தபசில் சொத்துக்களின் விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. மேற்படி 2 தபசில் சொத்துக்களின் எல்கை மால்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிக்கு எத்தனை வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சண்முகையா பாண்டியனை எனக்கு தெரியாது. அவருக்கு வாதி கிரையம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. வாதி, 1ம் பிரதிவாதிக்கு கதவு எண். 32 அல்லது 32 ஏ எழுதிக்கொடுத்துள்ளாரா

என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தின் பாரா 2 ல் 1 ம் பிரதிவாதி கிரையம் நற்கிரையம் என்றும், பிரதிபிரயோஜனத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது என்றும் சொல்லியுள்ள சங்கதி தவறு என்றால் சரிதான். தபசில் சொத்து சுப்பையாவை தவிர வேறு யாருக்கும் உரிமையில்லாததால் வாதியின் வாரிசுகள் யாரும் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு வாதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் தற்போது வாதியிடம் இருந்து வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதிக்கு வாதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதியிடம் எவ்வளவு தொகை வாதி கடன் பெற்று எழுதி கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதியின் பெயரில் பிராது 2 ம் தபசில் சொத்திற்கு வீட்டு தீர்வை உள்ள விவரம் எதுவும் எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 2 ம் தபசில் சொத்தில் வழக்கிற்கு முன்பும், பின்பும் தற்போது வரை வாதியும் அவரது வாரிசுகளுமே குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் அனுபவம் எதுவும் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண உறுதிக்கூற்றில் பாரா எண். 2 ல் மேற்படி கிரைய ஆவணத்தின் அசல் கிரைய தேதியிலேயே 1 ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், கிரைய ஆவணத்தினை வாதி கடனுக்கான ஆவணம் என்றும் கிரைய ஆவணம் என்றும் கூறியுள்ள கட்சி பொய்யானது என்றும் சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றும் மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 2 ம் தபசில் சொத்திற்கு உரிய வீட்டு வரி ரசீது இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதி பெயரில் மாற்றம்செய்யப்பட்டுள்ளது என்றும், 2 ம் தபசில் சொத்து 1 ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டதாகும் என்று சொல்லப்பட்ட சங்கதி தவறு என்று சொன்னால் சரிதான். வாதி 1 ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணத்தை தவிர்த்து எந்த விவரம் எனக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ

தெரியாது என்றால் சரிதான்.

4) எனக்கு 2ம் பிரதிவாதியை நேரடியாக தெரியும் என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பே 15 ஆண்டுகளாக தெரியும். 2ம் பிரதிவாதி தமிழ்நாடு மின்சார துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்று வட்டி தொழில் செய்துவருகிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியை வாதி எதற்காக வழக்கில் சேர்த்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியை பற்றி வாதி பிராதில் சொல்லியுள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. பிராது 3ம் தபசில் சொத்தை பொறுத்து என் மனைவி பெயரில் கிரையம் வாங்கும்போது வில்லங்கம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi